காரைக்கால் மார்க் துறைமுகம் சார்பில்

# டாக்டர் கலாம் கிட்ஸ் அறிவியல் கண்காட்சி



காரைக்கால் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் நடந்த குழந்தைகள் அறிவியல் கண்காட்சியை மார்க் துறைமுக தலைவர் மற்றும் ஜிஆர்கே.ரெட்டி, எம்எல்ஏ கீதா ஆனந்தன் ஆகியோர் பார்வையிட்டனர்.

## திரளான மாணவர்கள் பங்கேற்பு

காரைக்கால், ஜூலை 21: இந்தியாவின் மிக முக்கிய கடல்வழிநுழைவாயிலாக திகழும், காரைக்கால் மார்க் துறைமுகமும், சென்னை ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியாவும் இணைந்து, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் அனுபவக்கல்வியை பெற பல்வேறு வசதிகளை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, காரைக்காலில் டாக்டர் கலாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறக்கட்டளையை மார்க் துறைமுகம் கடந்த ஜூன் 30ம் தேதி தொடங்கியது.

மார்க் துறைமுகத்தின் டாக்டர் கலாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறக்கட்டளை சார்பில், நேற்று காரைக்கால் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில், டாக்டர் கலாம் கிட்ஸ் (குழந்தைகள்) அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. இதில், நாகை, நாகூர் மற்றும் காரைக்காலைச் சேர்ந்த சுமார் 800 மாணவர்கள் பங்கேற்று ரொபாட்டிக்ஸ், ஏரோஸ்பேஸ், மின்னணு, விவசாயம், வேதியியல், இயற்பியல் உள்ளிட்ட 800க்கும் மேற்பட்ட பல்வேறு அறிவியல் மாதிரிகளை, கண்டுபிடிப்புகளை காட்சிக்கு வைத்திருந்தனர்.

நிகழ்ச்சிக்கு, காரைக்கால் மார்க் துறைமுகத் தலைவர் மற்றும் ஜி.ஆர். கே.ரெட்டி தலைமை வகித்தார். மாவட்ட கலெக்டர் கேசவன், ஏ.ஐ.சி.டி.இ முன்னாள் தலைவர் டாக்டர் மாந்தா, கொல்கத்தா துறைமுகப் பொறுப்புக் கழக முதல் பெண் ரிவர் பைல்ட் ரேஷ்மா நிலோஃபர் நாகா, கல்பாக்கம் அணுசக்தி துறை ஐ.ஜி. சி.ஏ.ஆர் ஓய்வு பெற்ற மூத்த விஞ்ஞானி பேராசிரியர் டாக்டர் வைதேகி கணேசன், டிஃபென்ஸ் ஏவியானிக்ஸ் ரிசர்ச் எஸ்டாபிஷ்மெண்ட் பி.எம் குழு இயக்குனர் டாக்டர் அமர்பிரசாத் தேசிய விருது பெற்ற சிறந்த படைப்புத்திறன் மிகுந்த குழந்தை மஸ்டர் சபரி வெங்கட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து, பாண்டிச்சேரி மின்திறல் குழுமத்தலைவர் கீதா ஆனந்தன் எம்.எல்.ஏ கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

கண்காட்சியில் பங்கேற்கும் மாணவர்களில் 100 மாணவர்களின் சிறந்த திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஞாயிறுதோறும் 1 ஆண்டுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும். தேர்வு செய்யப்படும் மாணவர்கள் புதுச்சேரியில் உள்ள அறிவியல் மையத்திற்கும், ராமேஸ்வரத்தில் உள்ள டாக்டர் அப்துல்கலாம் நினைவு இடத்திற்கும் ஜூலை 27ம் தேதி அழைத்துச்செல்லப்படுவர் என்றார்.